
தீக்கதிர்

20.01.2024

# மதுரை துணை மேயர் நாகராஜன் வீடு மீதான தாக்குதலில் உரிய நடவடிக்கை எடுத்திடுக!

## கூட்டு நடவடிக்கைக்குழு காவல் ஆணையரிடம் மனு



மதுரை, ஜன. 19-

மதுரை மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் வீட்டின் மீது நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் காவல் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டது.

மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் வீடு மற்றும் அலுவலகம் மீது தாக்குதல் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச்சிறுத்தைகள் கட்சி, மக்கள் கண்காணிப்பகம், சோகோ அறக்கட்டளை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் அடங்கிய கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பில் மாநகரக் காவல் ஆணையர் ஜெ. லோகநாதனிடம் வெள்ளியன்று மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில், மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜனின் வீட்டுக்குள் ஜனவரி 9 ஆம் தேதி அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவரது அலுவலகமும் தாக்கப்பட்டுள்ளது. துணை மேயர் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது சரியான சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற வழக்குகள் பதிவு செய்து குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்ய வேண்டும். துணை மேயர் நாகராஜனுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். மதுரை நகர் மட்டுமின்றி தமிழகத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களால் குற்றங்கள் பெருகியுள்ளன. இதனால் பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் என ஒட்டுமொத்த சமூகமும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. எனவே போதைப்பொருள்களை மறைமுகமாக விற்பனை செய்யும் கும்பலை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில் மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி திபேன், சோகோ அறக்கட்டளை வழக்குரைஞர் செல்வகோமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகி காளிதாஸ், பெண்கள் எழுச்சி இயக்கம் மகாலெட்சுமி உள்பட பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள் ஒன்றாக இணைந்து ஜனவரி 18 அன்று நடத்திய கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்தில் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### துணைமேயருக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கிடுக

மதுரை மண்ணில் இயங்குகிற அரசியல் கட்சிகள், இயக்கங்கள், குடிமைச் சமூக அமைப்புகள் அனைவரும் கூட்டாக இணைந்து மதுரை மாநகராட்சியின் துணை மேயர் தி. நாகராஜன் வீடு மற்றும் அலுவலகம் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது.

இக்கொடூர தாக்குதலை நடத்தியவர்கள் மீது சரியான சட்டப் பிரிவுகளில் குற்ற வழக்கு பதிவு செய்து அவர்களை உடனடியாக நடவடிக்கை எடுத்து குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து மதுரை மாநகரின் அமைதியை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வழக்கு விசாரணை பாரபட்சமின்றி நடக்க சி.பி.சி.ஐ.டி பிரிவிற்கு மாற்ற வேண்டும். குற்ற கும்பலுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய ஆய்வாளர், சார்பு ஆய்வாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளை உடனடியாக பணியிட மாற்றம் செய்ய வேண்டும்.

துணை மேயர் தி. நாகராஜன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் நேர்மையாக மக்களுடன் நிற்பதால் சமூக விரோத கும்பல்களின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக துணை மேயர் தி. நாகராஜன் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால் 24 மணிநேர காவல் துறை பாதுகாப்பு (PSO) வழங்க வேண்டும்.